**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**O.S.No.241/2022**

**வழக்கு சாட்சி D.W.2**

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : சுந்தரகவுண்டர் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : பொன்னிவாடி | வயது | : சுமார் 66 |
| தாலுக்கா | : தாராபுரம் | நாள் | : 21.11.2025 |
| மாவட்டம் | : திருப்பூர் | | |

முதல் விசாரணை :

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றது என்றால் ? சரிதான். நான் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி கிராமம், எல்லப்பாளையம் தோப்பு தோட்த்தில் வசித்து வருகிறேன். எனக்கு தற்போது சுமார் 65 வயது ஆகிறது. அழைப்பாணையில் என்ன குறிப்பிட்டு வந்துள்ளது என்றால் ? நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதால் சாட்சி சொல்ல அழைப்பாணை வந்துள்ளது. என்ன விசயமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் ? கிருஷ்ணசாமிகவுண்டர் மகனுக்கும், மகளுக்கும் உயில் எழுதி வைத்தார். அந்த உயிலில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் கடந்த 12.06.2017 தேதியிட்ட தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3 புத்தகம், 65 / 2017 என்ற உயில் சாசனத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் சா.சா.ஆ.1**. அதேபோல், என்னிடம் காட்டப்படும் மற்றொரு உயில் சாசனமான தாராபுரம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3 புத்தகம், 64 / 2017 என்ற உயில் சாசனத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் சா.சா.ஆ.2**. மேற்படி

உயில்சாசனம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் ? கிருஷ்ணசாமிகவுண்டர் சொல்லி உயில்சாசனம் தயார் செய்யப்பட்டுள்ளது. உயில் சாசனத்தில் யார் யாரெல்லாம் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் ? கிருஷ்ணசாமிகவுண்டர் மற்றும் மகேந்திரன் என்ற ஒரு சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். மகேந்திரன் இரண்டாவது சாட்சி ஆவார். கிருஷ்ணசாமிகவுண்டர் கையெழுத்து போட்டதை நான் பார்த்தேனா என்றால் ? கைரேகை வைத்தார். நான் பார்த்தேன். நான் கையொப்பம் போட்டதையும் கிருஷ்ணசாமிகவுண்டர் பார்த்தார் என்றால் ? சரிதான்.

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.21 18:09:23 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.241/2022**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : கிருஷ்ணசாமி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : பருத்தியூர் | வயது | : சுமார் 55 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 21.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பருத்தியூர் கிராமம், வடபருத்தியூரில் வசிக்கும் கிருஷ்ணசாமி அவர்கள் மகன் சுமார் 55 வயதுள்ள பழனிச்சாமி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் 2-ம் பிரதிவாதி ஆவேன். இவ்வழக்கில் நான் கடந்த 01.07.2025ம் தேதி முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இன்று நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.21 18:09:28 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்